478

உ

சிவமயம்.

மீனாக்ஷி சுந்தரேஸ்வரர்பேரில்

# நூதன
# கல்யாணப்பாட்டு.

லுங்கு, ஊஞ்சல், கப்பல், லாலி, கதவு திரக்கிரபாட்டு, சோபானே. திருவனந்தல், தாலாட்டு, பள்ளியறைக்கீர்த்தனே, பத்தியம், தங்கம்பாட்டு கும்மி, மங்களம் முதலியன.

இவை
மதுரையில் வசிக்கும்
சர்வக்ஞ-வேதாந்த சிகாமணியாகிய
**மல்லிகார்சுனபாரதி அய்யரவர்களால்**
இயற்றியதை,

மதுரை புதுமண்டபம் புஸ்தகஷாப்,
**நாகலிங்கம்பிள்ளை அவர்களால்**
பரிசோதித்து,

ஷியார் குமாரர்
**என். செல்லய்யாபிள்ளை**
**அவர்களால்,**

சென்னை:— ஸ்ரீ ஆதிமூலம் பிரஸ்.
1926.
...ர் காபி ரைட்.

SCANNED
25:417
N26
78038

உ

சிவமயம்.

ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரேஸ்வரர்பேரில்

நூதன

# கல்யாணப் பாட்டு.

நலுங்கு, ஊஞ்சல், கப்பல், லாலி, கதவு திரக்கிரபாட்டு, சோபானை, திருவனந்தல், தாலாட்டு, பள்ளியறைக்கீர்த்தனை, பத்தியம், தங்கம்பாட்டு கும்மி, மங்கள முதலியன.

இவை

மதுரையில் வசிக்கும்
சர்வக்ஞ-வேதாந்த சிகாமணியாகிய
**மல்லிகார்சுனபாரதி அய்யரவர்களால்**
இயற்றியதை,

மதுரைபுதுமண்டபம் புஸ்தகஷாப்,
**நாகலிங்கம்பிள்ளை அவர்களால்**
பரிசோதித்து,

ஷியார் குமாரர்

**என். செல்லய்யாபிள்ளை**

அவர்களால்,

சென்னை:— ஸ்ரீ ஆதிமூலம் பிரஸ்.
1926.

ரிஜிஸ்டர் காபி ரைட்.

உ

சிவமயம்.

ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரேஸ்வரர்பேரில்

நூதன

# கல்யாணப் பாட்டு.

## விநாயகர் துதி.

வெண்பா.

மானை யணிவோன்மகனே மாயோன் மருகோனே
ஆனைமுக மானவனே ஐங்கரனே—சேனைத்
தலைவனுக்குமுன்னெழுந்ததற்பரா என்னாவில்
கலைமாது அகலாமல்கார்.

## சரஸ்வதி துதி.

செங்கமலவாணிதிருச்சேவடியைத் தான்பணிந்து
பொங்கமுடனேதொழுதுபோற்றுவர்க்கு—மங்களமாய்
வந்தெனது பங்கில்நின்று வாக்குவாணியும்பெருகத்
தந்துசுந்தர மருள்வாள்தான்.

## சுப்பிரமணியக்கடவுள் துதி.

மயில்வாகனா வள்ளிமாமோகனா வல்ல
கயிலைவள ரீசரருள் கந்தா ஒயிலாக
கங்கணங்களுங்குலுங்கக் கந்தபதமுந்துலங்க
இங்குவந்ததி கவரம் ஈ.

## சோமசுந்தரக்கடவுள் துதி.

சங்கரலிங்கந்தனுக்கோடி ராமலிங்கம்
எங்கும்முளைத்தெழுந்த யேகலிங்கம்—துங்கதிரு
ஆலவாய்க்குள் ளமர்ந்தலிங்கமாமுனது
கோலமிங்கு ஆறறிவார் கூறு.

## மீனாம்பிகை துதி.

ஆதிசிவனார்மருவும் மானந்தவல்லியுமை
பாதமனைத்தான்றொழுது பணிந்தேத்த—நித்தமவர்
பங்கில்நின்று ஆதரவாய்ப் பாலித்தருள்புரிவாள்
மங்களகல்யாணி மகிழ்ந்து.

## விநாயகர் வணக்கம்.

ஐந்துகரத்தனை ஆனைமுகத்தனை
இந்துமிளம்பிறை போலுமெயிற்றனை
நந்திமுகத்தனை ஞானக்கொழுந்தினைப்
புந்தியில்வைத்தடி போற்றுகின்றோமே,

## அம்பாள்வணக்கம் கலித்துறை.

மங்களமாஞ் சொக்கலிங்கேசற் பங்கினில்வாழுந்திவ்ய
சங்கரியானகௌரி மீனாம்பிகைத் தாயின்பதப்பங்கயம்
போற்றித்துதிசெய்குவாய் சென்மபாவனமாம்
இங்குண்மைகண்டுநெஞ்சே நினைந்தொழுதேற்றுவையே.

எல்லாம்பராசத்தி மீனாட்சியம்பிகையின் செயல்தான்
அல்லாது வேறொன்றமில்லை யவ்வாறறிந்துமுக்கியப்
பொல்லாவிஷயங்கள் தன்வசத்தால்தினப்போது வம்பாய்
செல்லாம லம்பிகைபாதாரவிந்தத்தைத் தியானிநெஞ்சே.

நெஞ்சேநிலையின்றி யின்னலவிஷநினைப்பதுவாய்
பெண்சாதிபிள்ளை கிரகங்கிராமட் சேத்திரப்பிரமையதாய்
தஞ்சாடைபோற்றுஞ் சிவசொக்கநாதர் மீனாம்பிகையாள்
தஞ்சோதிபாதம் மறந்தாய்யிது உன்தவக்குறையே.

போனதுபோகட்டு மிங்கினியாவதுட் போதந்தங்கி
கானற்சலமுலகாசை யெல்லாமென்று கண்டுஉடல்
நானெனதென் றகங்கொள்ளாம லுள்ளத்தில்நாட்டம்வைத்தா[ல்
மீனவள்சொக்கர்வந்துன்பா லெதிர்நின்று மெய்சொல்வரே.

சொல்லுவள் பாரப்போதல்லவோ அஞ்ஞானத் துடக்கருத்து
நல்லறிவுற்றுச் சதானந்தபோதத்தில் நாட்டமுண்டாங்
கொல்லு நமன்பயம் போய்விடுநாளுங்குவலயத்திற்
செல்லுமுன்வாக்குவருமீனாட்சி தன்கிருபைசித்திக்குமே.

## ஸ்ரீசுந்தரேசர்க்கு ஸ்ரீமீனாட்சி நலுங்கிடல்.

### ஸ்ரீராமா ஜெயஜெய என்றவர்னமெட்டு.

ஸ்ரீமதுராபுரி நகராஜடையில் கெங்கைதரித்த ஹரா
மாமதியை அணியுஞ்சிரா வாம்மனக்கோசரா. 1

திருவளர் தென்கூடல் நகர்செல்வ சொக்கநாதர்தன்மேல்
அருள்வடிவாம் நலுங்குரைக்க ஐங்கரன்றாள் துணையே. 2

கருவியெல்லாம் போக்கியருள் கதம்பவனநாதர்தன்மேல்
துருவமதாய் நலுங்குரைக்க சுப்பிரமணியர்துணையே. 3

சோகமெல்லாம் நிவர்த்திசெய்யுஞ் சோமசுந்தரேசர்தன்மேல்
மோகமுடன் நலுங்குரைக்க முன்வருவாய்வாணி. 4

பத்திமுத்திபதமருளும் பரமசிவனார்தன்மேல்
சுத்தியதாய்நலுங்குரைக்கச் சொரூபகுருதுணையே. 5

எண்ணான்குஉபநிஷத்தா லேத்தமுள்ளகால் நிருத்தி
விண்ணேங்கும்படியானவேதவிட்டம்பொருத்தி. 6

நேத்தியதாய் பந்தலின்மேல் நிரைநிரையாய் சரிபார்த்து
சாஸ்திரமாம் மரங்களதால் தான்முழுதும் பரப்பி. 7

புண்யபுராணாதிகளாம் போர்வையதால் மேல்மூடி
விண்முதலாந்தத்துவத்தை மேற்கட்டியாய் விரித்து. 8

அழியாதமணவரையில் அருள்வடிவதாகநின்று
சுழிமுனையிலிலங்குஞ் சிவசொக்கேசாவென்று. 9

பக்திபெற்றபெண்களெல்லாம் பகவத்கிருபைவேணு
மென்று-சுத்திபுத்தியோடுகந்து சூழ்ந்து நலுங்கிடுவார். 10

சுத்தசத்வகெந்த புஷ்பஞ்சு யஞ்சோதி தட்டில்வைத்து
கர்த்தன்மதுரேசனுக்குகருணை நலுங்கிடுவார் 11

இப்படியேபெண்களெல்லாம் இமவான்பெண்ணுமையுடனே
ஒப்புமையாய் சொக்கர்தன் பானுண்மையதாய்வந்து 12

முத்தொழிற்குங்காரணமாம் மோனவரந்தருமபய
அஸ்தங்களைத்தாருமய்யா அன்பாய் நலுங்கிடவே. 13

அனாதிஇல்லாமூலபரமானந்த நிலைகாட்டும்
இருதயத்தைத்தாருமய்யா இன்பநலுங்கிடவே. 14

வேதநன்னூல்நீதிகளால் விள்ளவொண்ணாப்பேரின்பப்
பாதமதைத்தாருமய்யா பணிந்துநலுங்கிடவே. 15

சகலகலைஞானமெல்லாந் தானுதிக்கும்போதசந்திர
முகமதனைத்தாருமய்யா மோகநலுங்கிடவே. 16

தாரணியில்லெவ்வுயிர்க்குஞ் சமரசமாம்பார்வையுள்ள
காரணக்கண்தனில்மழியாக் கருணைமையையெழுதி. 17

திரிபுரத்தைஅழித்தகண்ணுஞ் செல்வசொக்கநாதசிவன்
புருவமய்யம் நேர்நெத்தியிற் போதப்பொட்டையணிந்தார். 18

அரியயனிந்திராதிமுத லமரரெல்லாங்காணரிதாம்
பரமசிவன்சிரமதனில் பக்திமலர்தரித்தார். 19

பாதாதிகேசம்வரை பரனையுமைமுதலான
மாதரெல்லாங்கண்டுமனம் மகிழ்ச்சியதாய் நின்றார், 20

கோடிஜென்மம்யெடுத்தாலுங் கொன்றையணிசொக்கர்பதம்
நாடிநல்லகெதிசேரும் நாட்டமொன்றேவேணும். 21

மத்ததெல்லாங்கார்யமன்று மனந்தெளிந்தோர்கிலையதுவாய்
சத்தியுமை முதலான சார்ந்தமின்னாரெல்லாம் 22

விப்ரமல்லி கார்சுணன்போல் விரும்பிமதுரேசர்பதம் –
எப்பொழுதுந் தியானஞ்செய்து இருதயமுமொன்றாகி. 23

பூலோகவாழ்கையெல்லாம்பொருந்திஅனுபவித்துஅப்பால்
சாலோகம்முதலான சதுர்பதமும் மடைவார் 24

ஆதலினலின்னலுங்கை ஆராய்ந்து கேள்ப்பவர்க்கும்
ஒதியன்பாய்படிப்பவர்க்கும் உலகிலெல்லாம்பெருகி 25

அழியாதவாழ்வுபெற்று ஆலாஸ்யநாதர்பதம்
எழிதாகத்தானடைந்து இலங்கியென்றும்வாழ்வார். 26

நலங்கு முற்றிற்று.

---

## ஸ்ரீமீனாட்சிக்கு சுந்தரேசர் நலங்கிடல்.

நலுங்கிடபிலசே ஓ என்றவர்னமெட்டு.

தென்பாண்டியராஜனருள் ஸ்ரீமீனநயனிதிவ்ய
ஸ்ரீமீனநயனி தன்பால்மகிழ்ந்துசொக்கர்
தயவாய்நலுங்கிடுவார் வெகுநயமாய்நலுங்கிடுவார்.

மதுராபுரிவளருஞ்சிவவாலமீனாக்ஷிஆதிவாலமீனாக்ஷி
யெதிராகநின்று சொக்கரின்பநலுங்கிடுவார் வெகு
அன்பால் நலுங்கிடுவார். 2

அங்கயற் கண்ணி பரமானந்தரூபி—நித்யானந்தரூபி
தங்கவளை குலுங்க வணிதைதருவாய் நலுங்கிடவே
மனதுறவாய் நலுங்கிடவே. 3

சிரோங்கியேவளரும் நவதேனேவடிவே
நயமானவடிவேயுன்
மார்புதனைத்தா திவ்யவாசநலுங்கிடவேபிரகாசநலுங்கிடவே. 4

சுந்தரஞ்சேருஞ்செகச்சோதி மீனாட்சிபரஞ்சோதிமீனாட்சி
சந்திரமுகந்தனைத்தா சரசநலுங்கிடவே
நல்லவரிசைநலுங்கிடவே. 5

போதவடிவானபரி பூரணியாளே
ஜெகத்காரணியாளே
பாதசரமொலிப்ப உன்பாதந் நலுங்கிடவே
வெகுதனதாய் நலுங்கிடவே. 6

சந்தனம் புனுகு சவ்வாது பன்னீரும் சவ்வாதுபன்னீரும்
விந்தையுடன்கலந்து மெய்யெங்கும்பூசி
முன்கையெங்கும்பூசி. 7

மல்லிகைமுல்லைமலர்வாசமரிக்கொழுந்தும்மலர்
வாசமரிக்கொழுந்தும்—வல்லமீனாட்சி தன்மணிமுடி
மேலேதரித்தார்—வெகுஅணியணியாயலங்கரித்தார். 8

மல்லிகார்சுனன் சொல்மாதமிழ்குதவும் நன்மாதமிழ்குதவும்
வல்லமீனாட்சி தன்மனம்போல் நலுங்கிடுவார்
வெகுகனமாய் நலுங்கிடுவார். 9

நலங்கு முற்றிற்று.

## ஊ ஞ் ச ல் பா ட் டு.

இராகம்-பைரவி.

திருமேவிவளர் மதுரைநகரில்வாழுஞ்
செல்வசொக்கநாத சிவசாமிமீதில்
அருமறைநூல்தன்னி லுள்ளபொருளினாலே
அற்புதமதாய்ச்சமைத்த ஊஞ்சல்தன்னில் 1
கருவிகரணாதிகளை நீக்குஞ்ஞான
கருணைசுப்பராயர்பதங் கருத்துள்நாட்டி
துருவமதாய்ச் செந்தமிழாற்பாடநாளுஞ்
சுந்தரவிநாயகனுங் காப்புத்தானே. 2

நிச்சலமதானதொரு கால்கள்நாட்டி
நிர்விகல்பமானதொரு விட்டம்போட்டு
சச்சிதானந்தமதைப் பலகையாகச்
சதுர்வேதஞ்சங்கிலியதாகதாக்கி 3
மிச்சமாய்நின்ற பரஞ்சோதிஞான
விரிவானதிவ்ய ரத்னசனத்தின்மேவி
அட்சயமால்வரங்கொடுக்குஞ் சொக்கநாதர்
அங்கயற்கணம்மையுடன் ஞடிரூசல். 4

மாலயநிந்திராதிகளும் வடந்தொட்டாட்ட
மாமுனிவரிஷிகளெல்லாம் வடந்தொட்டாட்ட
சீலமுள்ளகின்னரர் கிம்புருடர்பாட
சித்ரூபமாதர் வெண்சாமரைகள்போட 5
கோலமயில்வேலரொற்றைக் கொம்பனுருங்
குறியிலடங்காபிரமத கெணங்கள்சூழ
ஆலமுண்டதென்மதுரைச் சொக்கநாதர்
அம்பிகைமீனட்சியுட ஞடிரூசல். 6

பருவதராஜன்கன சந்தோஷமாகப்
பாருலகத்தார்முழுதும் பணிந்துபோற்ற
அருள்வடிவான வுபசாந்தமாதர்
அற்புதவாலாத்திசுத்த அகங்கொண்டாட 7
பெருவெளியில்நின் றமரர்மலர்கள்தூவ
பேரின்பமாதர் சோபனங்கள்பாட
அறுபத்துநாலுவிளையாடுஞ் சொக்கர்
அம்பிகைமீனட்சியுட ஞடிரூசல். 8

பிர்மாதிம்தவரிந்திரன் முனிவர்வாழ்கப்
பேழைவயிற்றோன் பிரபலரிஷிகள்வாழ்க
இம்மானில்மறையோர்களெவரும் வாழ்க
எண்ணஅடங்காப் பிர்மதகெணங்கள்வாழ்க 9

கர்மஜென்மம் போக்கும்வடிவேலர்வாழ்க
கருணைமல்லிகார்ச்சுனனன் சொல்தமிழும்வாழ்க
அம்மையுமைமீனாட்சி மதுரைவாழ்க
ஆலாஷியசுந்தரரும் வாழ்க. 10

ஊஞ்சல்பாட்டு முற்றிற்று.

## சுந்தரேசர் கப்பல் பாட்டு.

இராகம்-புன்னாகவராளி.

ஏலஏலோ சோமலிங்கம் - ஏலஏலோக்ஷேமலிங்கம் திரு மேவும்ஆலாஷ்ய நகர்வாழ்செல்வ சொக்கநாதர்கப்பல் - தமிழைத்தரையோர்கள் கொண்டாட வேதாந்த சாரமதாய் - நான் பாட வென்னுளுங்.

### முடுகு.

குருமுனிக்குபதேசஞ் செய்திடும்போதங் கோலாகலச் சுப்பராய குருபாதங்-கருவிகரணநிலை நீக்கும்பிரசாதங்-கலை சகலமுந்தெளியவருள்பிரணவநாதம் இருள் தனையகற்றி யொளி தருமதிவிலாசம்-யீசசுத நாகியகணேசபதநேசம் பெருவெளி யில்மேவுகுரு நாதப்பிரகாசம்-பேசாதமாமௌன பிர்மமுந்து ணையே-ஏலஏலோ சோமலிங்கம் யேலயேலோ க்ஷேமலிங்கம்.

மூலசுந்தரேசர்கப்பல் தமிழைமோகமுடன் தெரிந்தமட்டும் உலகில் சீலமுடன்யானுரைப்பேன் பிரவாச் சின்மயமே கால்களதாய் ஒளிவாம்.

### முடுகு.

நாலுமறை உபநிடத மேல்விட்டமாக நாதாந்த ரத்தினங்கள் பக்கவரியாக மேலான ஆகாசமேல் பல கையாக வித்தை யெட்டெட்டும் நல்வாங்கனியாக காலபயமற்ற பரஞ்சோதி கண்

ணேட்டம் கண்டத்தைச் சங்கரிக்கும் புத்திநாட்டம் வேலாயுதம்ஞான வால்முதலதேஸ்டம் வினையற்றநங்கூரந்தங்குவெகு சிரேஸ்டம் ஏலஏலோ சோமலிங்கம் ஏலஏலோ க்ஷேமலிங்கம்.

சொக்கலிங்கங் கப்பலுக்குள்-சரக்கு சுருக்கமதாய்-இருப்பதைக்கேள்-ஜெனன துக்கமதை நிவர்த்திசெய்யும் ஆனந்த-சொரூபமெனும்-மாத்திரைகள்.

## முடுகு.

ரூகாதியைப்போக்கும் ஞானக்கினிசாரம்மாசற்ற பெருவழியில் சேர்க்கும் விசாரம் சொர்க்கநரகங்களுட சூதரிகெம்பீரந் தொய்தபாவனையருஞ் சொல்லாததிரம் முக்குணமகற்றியருள்மோன சிவபோதம் மூலமுதலீருரு தலமறிவினோதம் எக்காலமழியாத தற்பிரமனுதம் எங்கும் நிறைவாய் நின்றிலங்கும் பிரசாதம் ஏல ஏலோ.

இன்னுமந்த கப்பலுக்குள்வஸ்துக்கள் எத்தனையோ கணக்குஇல்லை அக்கப்பல் விண்ணமதாஞ் சிவநதிகடந்து வேதாந்த சாகரத்தில்

## முடுகு.

உள்ளமத மானதொரு நங்கூரம்பூட்டி ஓங்காரமானதொரு பாய்மரம்நாட்டி வர்ணபேதங்களாஞ் ஜெலஜந்துகோஷ்ட்டி மாசற்றமவுனவாழா ளதனைவெட்டி நிர்ணயமதானதொரு சுக்கானைநாட்டி நிலைபெரும்பக்தி கண்ணோட்டம தைத்தேடி தன்னறிவு காட்டுமறைநூல் வழியைக்கூடி சாமியுடகப்பல் வந்துசேர்ந்தது கொண்டாடி ஏல ஏலோ.

ஆதிசொக்கநாதர் கப்பல் தமிழை ஆசையுடன் கேழ்ப்போரும்-எழுதி பிரிதியுடன் படிப்போரும் அழியா பேரின்ப-வீடு பெற்று-என்றைக்கும்.

நீதிமல் விகார்ச்சுனன்சொல்நேசவழி கொண்டுநித்தியபரி பூரண விலாசமதைக்கண்டு - சோதிபர மானந்தமானநிலைசெ ன்று-தோனவில்லா சிற்சொரூபமாய் நின்று மீனாட்சிமாயா- விநோதந்தெரிந்து - கோதில்லாச்சொக்கேசரருள்து பொரு ந்தி-குறையாத நிதிபெருகி நிரைவாழ்வுபெருவார் ஏல ஏலோ சோமலிங்கம் ஏலஏலோ க்ஷேமலிங்கம்.

ஏலப்பாட்டு-முற்றிற்று.

---

## மீனாக்ஷியம்மன் கப்பல்

ஏலஏலோ பிரமமயம் ஏலஏலோ சம்புமயம் ஆனந்தம் பொங்கிவளர்-மதுரை - அம்பிகைமீனாக்ஷி தன்மேல்-தெளிந்த வானென்ற கப்பல்தனை-மகிழ்ந்து மாதமிழால்த் தானுரைப் பேன்-விபோத.

### முடுகு.

ஞானவடிவாம் சுப்பராயகுருமூர்த்தி. நாதாந்தமாகுமிரு பாதமலர்போற்றி தானவரெண்ணிபரிபூரணமதாகி—சாட்சியாய் நின்றசிவ சங்கரனுமாகி - நானென்ற ஆண்மையில்லாதவனை விண்டு - நான்முகன்முதலான ஐவருக்கொண்டு - தேனென்ற மெஞ்ஞானசாகரந்தன்னில்ஜெனனமில்லாக்கப்பல் திரளவருதப் பா - ஏலஏலோபிர்மமயம் ஏலஏலோ - சம்புமயம்.

மாதவமாங் கப்பலுக்கு-சோடிப்பு வகையாகத் தானுரைப் பேன் - எங்கும் ஆதரவாகிநின்ற விசித்திரமானதொரு கால நிறுத்தி துலங்கும்.

## முடுகு.

வேதமுடி வானதொரு விட்டமது எத்திவெட்டவெளி யாய்ச்சமைந்த பலகையதைச்சாற்றி சேதமில்லாத நவரெத்தினம்பதித்து சிவஞான மேல்கட்டித்தானேவிதித்து பேதவபேதமில்லாப் பாய்மரம்நாட்டி பின்னமில்லாதஜெய பேரியதுகொட்டிநாதம்பொருந்து மன்னுதாந்தக்கப்பல் நாடெங்குந்தன்மயமதென்றுவருதப்பா ஏலஏலோ பிர்மமயம் யேலலோ சம்புமயம்.

நித்திய மீனாட்சியம்மன் - கப்பலுக்கு - நிரைவானசரக்கு-சுருக்கி - மொத்தமதாய்த் தானுரைப்பேன் - ஒளியா மோகமதமார்ச்சரியம்இ-துகள்.

## முடுகு.

அத்தனையுந்தள்ளிவிடு மானந்தநாதம் அஞ்ஞானபேதமகற்றிவிடும்போதம் சித்தம்நிறுத்திவிடுந் தீரப்பிரசாதஞ்சென்மந்துலேந்துவிடுஞ் சின்மயவினோதங்கர்த்தநவனுய்விக்குங், கல்யாணவாரங் கருத்தைத்திருத்தி விடுங் காரணசாரஞ் சுத்தநிற்மலமானசோதிசரீரந் தோண அரிவிக்கும் மகாசிம்மவீரம் ஏலஎலோ.

இன்னம்வெகு ரெத்தினவகை-சிறது-இயல்பாகத் தானுனுரைப்பேன்-அதுகேள்-யென்றும் பிரப்பில்லா - மாணிக்கம்-யெத்தனையோ கோடிலட்சம்-ஆயுத.

## முடுகு.

அன்னமய கோசமுதலேந்தான கோசம் - அருத்துத்துணித்து விடுமம்பரவிலாசஞ் சென்னவயசுக்குளேசேஷாதிஷேஷஞ் சிவபாவனையருந்திவ்யப்பிரகாசம்-வர்ணபேதங்களில்லாச் சவுளிகோடி-மாசற்றபீதாம்பரங்களுந்தேடி நிர்ணயக்காரனைக் கண்டாரஞ்சூட்டி - நெரிமுறையில்லாக் கப்பல்வருகுதுகொண்டாடி ஏலஏலோ.

சிவமென்னும்நதியைவிட்டு - சாம்ப சிவமானசாகரத்தில்-ஒன்றில்லாக் கேவலமாம் பரமாமமிர்த-கப்பல் கெதியாகத்தான் வரவே ஒளியா.

## மூடு கு.

ஆவலெனு மஞ்ஞான காட்டைவெட்டிக்கூட்டி அழியாத மெஞ்ஞானசெந்தணலைமூட்டி பாவமெனும் புண்ணியமெனும் பாவத்தைமாட்டி பாசபசுவென்றமுறை யத்தனையுமோட்டி-சோபிதச் சொச்சப்பிரகாசத்தைநாட்டி - சுயமான வேதாந்த வாளதனைத்தீட்டி - சாவுகேடில்லாத தன்பட்டஞ்சூட்டி-சகல பிரபஞ்சமதுந்தன் மயமாய்க்காட்டி - ஏலஏலோ.

சலனமில்லா வாறு தியின் - மய்யத்தில் சமரசமாங்கப் பலது - கனமாய் - நிலையாமல்த்தான்வரவே - அஞ்ஞான நெடிய வெள்ளம் பொங்குமடா - அசையா.

பெலமான அத்தொய்தநங்கூரம்போடு பின்னமாம்முதலை வரும் பிரவியரச்சாடு - பல்லானசாதிமீனுமையின்கூடு பரமானவாட்கொண்டு வெட்டியதைமூடு மலையாமல் கப்பல்தனை அப்புறத்தோட்டு - வாசனைத்திரயமதுமாளவேதீட்டு துலையாதஜென்மந் துலைந்ததே யாட்டு தொய்தம்விட்டத்தொய்தஞ் சேர்ந்ததடாமூட்டு ஏலஏலோ.

பதினாலு புவனமெல்லாம் கொடியில் படைத்தளித்த பரமசிவன் மகிழும் - அங்கபற்நண் மீனாட்சிதேவி அம்பிகை யுந்தான்வாழ்க - புவியில்.

## மூடு கு.

மாதவம்பெற்ற பெரியோர்களும்வாழ்க சத்யநிதமாய்விள ங்கும் மெஞ்ஞானியர்கள்வாழ்க - நித்தியநிற்மலசுப்பிராய குரு வாழ்கப் பதியாயிருந்த பராபரம்வாழ்க பாசபசுநீங்கும் பெரி

யோர்களும்வாழ்க கதியேமிகுந்துதருங் காரணம்வாழ்க கரும சஞ்சிதமற்ற பெரியரும்வாழ்க நிதியே நிரைந்த சிவதேசிகன் வாழ்க - ஏலஏலோ.

ஸ்ரீமீனாட்சி கப்பல்பாட்டு

முற்றிற்று.

---

## வாசற்கதவு திறக்கிறபாட்டு.

### மீனாட்சிக்கும் சுந்தரேஸ்பருக்கும் தர்க்கம்

இராகம்-சௌராஸ்டசம்.

திருமதுராபுரிச் சொக்கேச ருமையாள்மனத், திரைத விழ்த்தேகஞ் - செய்திராணியை மனக்குரைதவிள்த்தேகஞ் செய்திராணியை. 1

குருமுனிக்கருள் சுப்பருயர்துணை, உட்க்கொண்டுகூற - விநாயகன் காப்பு—வேதசார விநாயகன் காப்பு 2

பரமபுருஷ சுந்தரேசருமையாள் மனப், பாசம்நீக்குந் தமிழைப்பாட - பஞ்ச கோசநீக்குந் தமிழைப்பாட. 3

பிரமையகலச்சொல்லுஞ், சற்குருவாணி திருச்செங்க மலப் பொர்பதங்காப்பு - கிருபை தங்குஞ்சிவதற்பதங்காப்பு. 4

நானேன்றும் நீயென்றும் இரண்றன் றிநிற்கஇந்தராகத்துரை யேன் மீனலோசனே இந்தசோகத்துரையேன்மீனலோசனே

மான்மழுவேந்துந்திவ்ய வடிவுதனைக்கண்டு - நான் மருவ நினைந்தேன் சுந்தரேசா அதுதிரையாகவந்தது மகேசா. 6

நினைப்பும்மறப்புங்கொண்டு நீயென்னைநினைந்ததுநீதியல்லவே மீனலோசனே - யிது பிரிதியல்லவேமீனலோசனே. 7

உனைப்புருஷ வடிவாய்க்கண்டேனதஞ லெந்தனுள்ளத்தில் நினைந்தேன் சுந்தரேசா தேக மிளைத்து மெலிந்தேன்சுந்தரேசா.

நீ நினைந்ததுசரி நீ யென்னுள்ளிருக்கையில்ரெண்டுநினைப் பேன் மீனலோசனே மோகங்கொண்டிளைப்பானேன் மீனலோ சனே. 9

நானென்னுள்ளிருந்தால் நாமரூபாதியல்லோரெண்டாயத் தோணுதே சுந்தரேசா அதைக்கண்டேமோகம்பூணுதேயீசா

நாமரூபாதியெல்லா முனையன்றிவேரெந்த ஞானத்தைப் பாருமீனலோசனே நன்றாய்த்தியானித்துப்பாரு மீனலோசனே.

சாமியுன்னுடையமாயம் யென்னபார்த்தாலும் நெஞ்சஞ்-சமரசங்கானேஞ் சுந்தரேசா யென்னை நிமிஷஞ் சேர்ந்தனை சுந்தரேசா. 12

உன்னைநீ அரியாமலென்னை நினைப்பதெல்லாம் உண்மை யல்லவே மீனலோசனே இது-செம்மை யல்லவேமீனலோசனே.

என்னைநான் அரிவதென்னிரு தயவிலாசமல்லால்-வெப் படிக்காண்பேன்சுந்தரேசா சும்மாமெய்ப் பொருளாஞ் சுந்த ரேசா. 14

அரிந்தும் அரியாதுபோ லிருந்தாலிந்த வகைக்கியார் யென்னசெய்வார் மீனலோசனே உன்னைநீபார் மீனலோசனே.

அரிந்தவகையும் மரியாதவகையுமுன்னை - அணைந்தால் தெளியுஞ்சுந்தரேசா-கட்டிப் புணர்ந்தால் தெளியுஞ் சுந்தரேசா

சொன்னதைச் சொல்லிச்சொல்லி மன்றாடுவதாலுந்தன் - சோகந்திருமா மீனலோசனே கொண்டமோகந் திருமா மீன லோசனே. 17

யென்னசெய்வேனென்மாயம் எண்ணிஎண்ணியெப்போ தும் - யேங்குதேமனஞ்சுந்தரேசா-உன்னைநோங்குதே சேருஞ் சுந்தரேசா. 18

வீணாகச்சோகப்பட வேண்டாம் மனதிலுள்ளவிகர்ப்பத் தைவிடு மீனலோசனே அப்போ சுகத்தைதேடுவாய்மீனலோ சனே. 19

காணாதநின்வடிவை கண்டாலென்மனம் அப்போ கசடு நீங்குமேசுந்தரேசா உந்தன்வசம தடைவேன் சுந்தரேசா. 20

காணாதவிடங்கண்டு கலவிசெய்குவோம் மனக்கசடகற்று வாய் மீனலோசனே வந்தஅசடகற்றுவாய் மீனலோசனே. 21

வேணுமென்றென்னை சேரும் விருப்பமுமக்குண்டானல் வெளியாமசடு சுந்தரேசா அப்போதெளிவாமனது சுந்தரேசா.

ஆபரணமகற்றி அழிவற்றபோகஞ் செய்வோம் ஆசைத் திரையேன் மீனலோசனே-இந்த மோசத்துரையேன் மீனலோசனே. 23

தீவரமாய்நீயென்னை சேர்ந்தால் அவ்வாசைத்திரைநிலைக் கும்மா சுந்தரேசா மோசத்துரைநிலைக்குமா சுந்தரேசா. 24

சங்கத்திரையமகற்றிசமரசபோகஞ்செய்வோஞ் சங்கர்ப் பம்விடும் மீனலோசனே-யெல்லாம் இங்கர்ப்பந்தான் மீனலோசனே. 25

மங்களவடிவாய்நீ மகிழ்ந்தென்னை சேரவந்தால் வருமா சங்கல்ப்பஞ்சுந்தரேசா அல்ப்பம் பெருமா மனத்தில் சுந்தரேசா. 26

சங்கல்ப்பமல்லோ நீநானீரண்டாயுரைத்துக் தனித்துப் பாரொன்று மீனலோசனே யெங்கும் யெனைத்தானுய் காண்பாய் மீனலோசனே. 27

திங்களணியுஞ்சுந்தரேசரிவ்வாறுசொல்ல திரையகன்றிரு வருஞ் சினேகித்தார்-பாபஅறனிட முன்மனதேகித்தான். 28

சிவசக்தி அய்க்கியந்தான் சீவேசுரனைக்கியின் தெரிந்தால் சென்மபாவனமாகும்பார் - தன்னை அறிந்தால் கர்மசஞ்சிதம் போகும்பார். 29

கவலையொழிந்து மல்லிசுகார்ச்சுனன் தமிழைப்போல் கச டரநின்றென்னாளும் வாசிப்பார் உள்ளநிசவடிவாய் நின்று பிரகாசிப்பார். 30

ஏசல்-முற்றிற்று.

## தாலாட்டு.

இராகம்-நீலாம்புரி.

பூலோககைலாச புண்ணியமாமதுர
ஆலாஸ்யசுந்தரா சதானந்தாகண்வளராய்.

ஆருபத்துநாலுவிளை யாட்டமிடுமாமூர்த்தி
பேருபெற்றமூலலிங்கப் பிரமமேகண்வளராய்.

சத்தமுதலாம்விடயத் தணுகரணயாபாரப்
பற்றகன்றுநின்றிலங்கும் பரமனேகண்வளராய்

ஐங்தொழிற்குங்காரணமாம் அங்கயற்கண்ணாள் மருவுஞ்
சுந்தரமேசாம்பசிவ சொக்கையாகண்வளராய்

பஞ்சகோசாதீதா பிரணவார்த்தமாம்பொருளே
நஞ்சனியுஞ்ஞானசொக்க நாதனேகண்வளராய்.

விண்ணொளியேகண்ணொளியேவேதாந்தத்துட்பொருளே
எண்ணமில்லாச் சோமசுந்தரேசனேகண்வளராய்.

காமதகன முடிவு காணா தரும்பொருளே
சோமசுந்தரேசசிவ சொக்கேசாகண்வளராய்.

பூதமதினுட்ச்சார பூதமதுவாய்விளங்கும்
போதபரிபூரண புராதனனே கண்வளராய்.

உள்ளுணர்வதாகநின்று உலகபரிபாலனஞ்செய்
கள்ள மில்லாநிஷ்காமக் கர்த்தனேகண்வளராய்.

தனக்கெதுவும்மிப்பரமாய்தானெதிர்க்கும்மப்பரமாய்
நினைப்பும்மரப்பில்லா நிர்மலனேகண்வளராய்
வேதவேதாந்தமேடையின்மேல் நின்றிலங்குந்
துவாதசாந்தச்சோம சுந்தரனேகண்வளராய்
பக்தன்மல்லிகார்ச்சுனன்சொல்பைந் தமிழுக்கென்று
ளுமருள்சுத்தமெய்ஞ்ஞான சொக்கையாகண்வளராய்.

தாலாட்டு-முற்றிற்று.

## லாலிப்பாட்டு.

இராகம்-ஆனந்தபைரவி.

லாலிலாலய்யலாலி ஸ்ரீ சொக்கநாத மதுரேசலாலி மூலலிங்கேச லாலி-மாப்பரமமோட்ச சாம்பராச்சியலாலி. 1

திரிபுரமழித்ததீரா-வேதாந்தசித்தாந்த முத்திசாரா சர்வ லோகோபகாரா-பூரணசதானந்தநிர்விகாரா. 2

ஆதாரமூலவாசா - பிரகிருதிமுதலான வஞ்ஞானநாசா-போதாந்தசித்விலாசா மா-மதுரபுரி சோமசுந்தரேசா. 3

மீனலோசனிசமேதா - பவசோகவினை தவிழ்க்கும் பிர போதா-மோனவடி வானநாதா-சாயுச்சிய - முக்தியருளும் பிர சாதா. 4

பஞ்ச கோசா தீதனே - வெட்டாதபரம சுந்தரநாதனே வஞ்சமில்லாப் போதனே - தேவரிஷிமாமுனிவர் தொழும் போதனே. 5

சகுணநிற்குணமற்றவா குன்றில்வளர் - சண்முகவனைப் பெற்றவா-சுகவடிவாதாங் கொற்றவா-யெண்ணுளுந்தொண்டர் மனதன்புற்றவா. 6

சர்வமங்களகாரணா சாஸ்வதசதானந்த பரிபூரணா
அருள்தருந்திவ்ய சரணா-சிவேச அஞ்ஞான பேதஅரணா. 7

துவாதசாந்தப் பிரசித்தா-சிவஞ்ஞான தத்வயோகியரு
ளத்தா-கோதிலாப் பரமசுத்தா-தத்வாதிகுணரகிதவல்லசித்தா. 8

கதம்பவனம் வந்தகருவே-கேட்டதுசெய்கர்ப்பகமான
தருவே - இருதயவடிவானவுருவே - லோகாதியெங்குந்தோணு
மரிவே. 9

நிச்சிந்தையானராயா-கெவுரியுமை நித்தியகல்யாணிநேயா-
சச்சிதானந்தசகாயா அழியாத-தற்பர நமசிவாயா. 10

பார்வதிப்பிராணநாதா-பக்தபரி பாலனஞ்செய்விநோதா-
சார்வபௌமச்சியபோதா-வேதாந்தசாரவடிவானபாதா. 11

ஆலாஸ்ய க்ஷேத்தி ரவாசா - நிற்குண-நிராபாசமாமகேசா-
மூலசுந்தரவிலாசா சாயுச்சிய-மோக்ஷ திவ்யப்பிரகாசா. 12

அப்பிரமேயா சிவாய-யெட்டெட்டு-ஆடல்புரியும் மூபாய-
சொற்பிரகாசாபௌரிய-மல்லிகார்ச்சுன கவிக்கருள்சகாய. 13

லாவி முற்றிற்று.

---

## நாகலிங்கம் பிள்ளைபாடிய

## சீ ச ப த் தி ய ம்.

ஸ்ரீ மீனலோசனி சிங்காரரூபிணி
பக்தஜனரக்ஷணி மரமதயாளி—

சோமேசபாரினி சுயஞ்சோதி சொரூபிணி
கமலாசனார்ச்சினி கடம்பவல்லி—

மலயரசபுத்திரி மகிகுடாசுரமர்த்தனி
மங்கள கல்யாணகுணவாரிநீயே
சண்முகஜென்னினி சாயுஜ்ஜியபதவினி
மாதவசகோதரிமதுரவாணி

சோகமதுதீர்க்குஞ் சுகுணவல்லி
அடியார்களைரெக்ஷிக்கும் அனந்தரூபி
பரமதயாபரிபாண்டிய குமாரி
வந்துகாத்தருளங்கயர் கண்ணிதேவி

மதுராம்பிகா சுந்தரவனம்பிகாபூர்ணச்
சந்திராம்பிகா ரத்னபரணதாரி
வாலாம்பிகா பரிபூரணம்பிகாசுந்த
ரேசாம்பிகா முகரக்ஷணி

லலிதாம்பிகா தக்ஷபுத்ராம்பிகாயோக
ஞானம்பிகா ருத்ரனுத்மதாரி
லீலாம்பிகா பாண்டியராஜாம்பிகாதிரிலோக
மேலாம்பிகா முக்திநிலயுதாரி

பரிபூரணவுல்லாச பாக்கியவல்லி
நவரச அலங்கார நாட்யவல்லி
தமியனைரக்ஷிக்க தயவுகூர்ந்து
வந்துகாத்தரு ளங்கையர்கண்ணிதேவி.

ஆலாஷ்யசுந்தரி அகிலாண்டநாயகி
சாதுரக்ஷினிபத்ம வதனிநீயே
பூலோககைலாச புரிராஜ்யதாரிணி
கோமாளாங்கித ரத்னகிரீடதாரி

சாதுரசுஷணி பாக்யசாலினியோகினி
மோகினி சொரூபிணிமுதல்வி நீயே
சாலோகபதவினி சாமளாதேவினீ
சஞ்சலந்தீர்த்திடும் தயாளிநீயே

இந்துவதனசமானகரரூபி
பருவதராஜகுமாரி பாக்யமீந்து
தனையனைக்கார்த்திடத்தயவுவைத்து
வந்துகாத்தரு ளங்கயற்கண்ணி தேவி

பத்தியம் முற்றிற்று.

## திருவனந்தல் உதயராகம்.

இராகம்-பூபாளம்.

ஸ்ரீமதுராஹாலாஸ்ய க்ஷேத்திரபதியானதிவ்ய
சோமசுந்தரேச சொக்கேகண்பாரும். (எச்சரிகை)

வேதவடிவாங்குக்குடம் மெய்ஞானக்காகங்களும்
பேதமறவேதெளிந்து பேசுதந்தவேளே. (எச்சரிகை)

வேதியர்கள்வேதாங்க விதிமுறையிலோதுகின்ற போதில
நுஸ்டானஞ் செய்யும்பொழுது நின்கண்பாரும் (எச்சரிகை)

போதவருணோதயமிப்பொழுதென விப்பூலவுகில்
மாதவர்கள்மனனஞ்செய்துவணங்குமந்தவேளை (எச்சரிக்கை)

தேவரிஷிமாமுனிவர் தேவேந்திரன்முதல்சகல
காவலர்களூழியர்கைகட்டிநிற்கிறார். (எச்சரிக்கை)

குருமுனிவன்தனக்கருளும் குமரன் முதலோர்களுமுன்திரு
வனந்தல்சேர்வைசெய்யச்சேர்ந்துநிற்கிறார் (எச்சரிக்கை)

காயாதபால்சர்க்கரை கசடில்லாநெர்ப்பொரியும்
ஆயமகாசெனங்கள்கொணர்ந்தருகில்நிற்கிறார். (எச்சரிக்கை)

வாத்தியகீதமுழங்க மறையோர்சொஸ்திவாசினங்கநேர்த்தியுட
னேதிவந்து நெருங்கிநிற்கிறார். (எச்சரிக்கை)

சோமசுந்தரேசரிவ்வார் சொல்லுங்கண்விழித்தெழுந்து க்ஷேம
மாந்திருவனந்தல் சேருவைகொடுத்தார் அன்பர்அடுத்தார். எச்

சொக்கேசர் மீனாட்சி சோபிதமாந்திருவனந்தல் - முக்கியமாந்
தெரிசனத்தைமோகமுடன் செய்வோர் என்றுமுய்வார். எச்

மதுரை மல்லிகார்ச்சுனன் சொல்மாதமிழைப்போ லுலகில்-
ஸ்திதியாகநின்று வெகுதீரம்பெருவார் சாரமருள்வார்.(எச்சரி)

எச்சரிக்கை முற்றிற்று.

## சுவாமிபள்ளியறைக்கு போகுங்கீர்த்தனை.

இராகம்-தோடி.

பல்லவி.

சோமசுந்தரச்சொக்கர் க்ஷேமப்பள்ளியறைக்கு - சுத்தமுடன்
வரும்விசித்ரமெல்லாங்கேள்சொல்வேன்

அனுபல்லவி.

கோமளவல்லிஅபிராமி மீனாட்சியுடன்கொஞ்சிவிளையாடி
யமஞ்சமீதில் சுகிக்க-மாமயல்கொண்டு அர்த்தஜாமமேலான
பின்பு வாசகயிலாசமதுரேசப் பிரகாசதிவ்ய. (சோ)

சரணங்கள்.

நித்தியமுஷகால முதலர்த்தசாமம்வரை மந்திரநீதியாபி
ஷேக நெய்வேத்தியமுதலாய்க் குற்றமில்லாமல் சகலகிரியை
களுங் கொண்டு முடித்துக் கனகதண்டிக்கையின்மேல்-சித்த
முடன்மேவியிருக்க கட்டியக்காரர் செயசெயவென்று நல்லகட்
யஞ்செப்ப- சொஸ்திவாசனங்கள் வேதசிஸ்டமறையோர்கள்

சொல்லத் தொகையில்லாத் தீவட்டிகள் ஜெகமெங்கெங்குந் துலங்க. (சோ)

நந்திகொலுப்பீடமெதிர் முந்தியேதொயாஸ்தம்பமுன்நடனாட்டிய சங்கீதநாதம்காஷமாய் - வந்திருக்கண்ணோரம் மறையவர்வேதஞ்சொல்ல மாகனிவாய் ஓதுவார் தேவாரமுரைக்க சித்தைபத்தியாய்க் கணக்கர் ஒன்றுந்தப்பாமல் தினசரிபடிக்கச்-சோதிடநாழிகை அந்தவேளைசொல்ல உடனுதிபிர்ம்மதாளமிட அட்சணம்மவ்விடமே விட்டானந்தமதாய் மகிழ்ந்து. (சோம)

பொங்கமுடனேநடக்கப் பூவையர் நடனமிட பூசுரர் நடைபாவாடைபூவில்விரிக்க மங்களத்தாம்பூலம்வைத்தரைக் கரைநெய்வேத்தியம் வருசையாய் தூபதீபாராதனைசெய்ய - வெண்குடைசுருட்டி சாமரஞ்சங்கீதவாத்தியவிருதுடன் சங்கிலியின் மண்டபஞ்செல்ல சங்கிலிப்பின்னல் நடக்க-அங்குடன் கட்டியக்காரர்சாமிவந்தசேதி சிவகாமியுமையுடன் சொல்ல. (சோம)

அம்பிகைக்கவ்வேளை மூக்கிலாபரணம் நீங்கஉடல் ஆலாத்திகல் பூரதீபாராதனைசெய்ய - இன்பமுடன் தேவிகும்ப ஜெலங்கொண்டுவந்து யீசனிருபாதப்பிர்ச்சாளனஞ்செய்து அன்புடன் துயிலால் துடைத்து-பயபக்தியாய் அழைத்துப் பரமஅமசமெத்தையில்செல்ல நம்புங்கனிவுள்ள துங்க அன்பன் மல்லிகார்ச்சுனய்யன் நற்றமிழ்க்கிரங்கும் ஸ்ரீமீனாக்ஷிதன்னுடன்ரமிக்க. (சோம)

---

## கலித்துறை.

இப்படிச் சொக்கரு மீனாட்சியம்மனு மேகமதாய்
அர்ப்புதப் பள்ளியறை மேவியானந்த மாயிருக்க

அப்பமுங் காச்சியபாலடையுஞ் சம்பாவன்னமுஞ் [ரே
செப்பமதாய்க்கொணர்ந்தப்போ நெய்வேத்தியஞ்செய்தன
செய்தவுடன் திரைவாங்கவுஞ் சோடசதீபமுதல்
வையமெல்லாந்தொழக் கர்ப்பூரதீபவரை நடத்தி
மெய்யென வேணஉபசாரமுஞ்செய்துமேதினியோர்
உய்யவும் வேதங்கள் தேவாரமும்ஓதினரே.

## சச்சிதாநந்த ஞானக்கும்மி.

சீர்தழைக்குஞ் சுப்பராயகுருபர
தேசிகன் சற்குருதன்னருளால்
பார்புகழுஞ் சச்சிதாநந்தமாங்-கும்மிப்
பைந்தமிழ்கேளடி ஞானப்பெண்ணே. 1

தத்துவமாருபத் தாராருபூதங்கள்
சாதிவர்ணாஸ்திர பேதங்களும்
வஸ்துவில்நின்று உதித்ததென்று-அந்த
மர்மந்தெரியாயோ ஞானப்பெண்ணே. 2

சாத்திரவேத புராணங்களுஞ்செப
தாரணையோக முதலுமெந்த
சூத்திரதாரியிட முண்டாச்சுதென்று
சோதித்துப்பாரடி ஞானப்பெண்ணே. 3

கர்ம்மாதர்மஞ்சுக துக்கமுஞ்செய்யுங்
கர்த்தாபோத்தா வெனமொழியுஞ்
சும்மாசொல்வதி லென்னபலனதைத்
துடர்ந்துபாரடி ஞானப்பெண்ணே. 4

பஞ்சப்பொறி புலன்குட்டதனையூனிங்
பார்க்கப் பரசுகமுண்டாமே 5

வஞ்சவிடயப் பொருளுடன்சேர்வது
மார்க்கமல்லவே ஞானப்பெண்ணே. 5

பாசப்பசுக்க ளுண்டாமிடமுமந்தப்
பாசப்பசுக்க ளில்லாவிடமும்
வாசனை தன்னை மறந்து ஒருக்ஷணம்
வந்துசேரடி ஞானப்பெண்ணே. 6

வாசனையில்வந்த வையத்தொழிலுடன்
வாழ்வதுயென்ன நிலையாமோ
ஓசையடங்கிய பூரணவீட்டினில்
உகந்துவாழடி ஞானப்பெண்ணே. 7

சொல்லச்சொல்லத் தெரியாதிருந்தாலுந்தன்
துன்பமதாகும் பிறப்பருமோ
வல்லபமேதென்று கேட்டாக்காலுந்தன்
மனதுதானடி ஞானப்பெண்ணே. 8

தானேஇப்படித் தோணினதென்றந்தச்
சந்திதெரியாமல் வீணில்
யேனோயிப்படி நீயிருந்தாலிதி
லென்னவரும்மடி ஞானப்பெண்ணே: 9

என்னவருமென்று கேட்டாக்காலிதி
லின்பமுந்துன்பமு முண்டாகும்
நிர்ணயமாகிய சன்னதியில்வந்து
நிலைத்துக்கொள்ளடி ஞானப்பெண்ணே. 10

அந்தநிலைப்புநிலைத்து தென்றாலுனக்
கன்றேஜென்மங்கள் தான்போச்சு
சிந்தையில்குற்றங்கள் வைத்தாளவந்த
ஜென்மந்துலையுமோ ஞானப்பெண்ணே. 11

வித்திலிருந்துபயிர்தழை விருட்சங்கள்
வேண்டியகாய்கனி உண்டாம்போல்

சத்திலுதித்தஉயிருலகாமென்று
தனித்துப்பாரடி ஞானப்பெண்ணே. 12

ஒண்டியொழித்த யிடமதுவேதென்னி
லுள்ளத்தைக்கண்ட ததுதாண்டி
அண்டர்கள்கோடி முனிவர்வணங்கிய
அறிவுதானடி ஞானப்பெண்ணே. 13

அறிவுதானடி ஐம்பூதவடி
வாகயிருந்து விளங்குதுபார்
அறிவுநீயென் றறிந்தாக்கால்
வானந்தம்தானடி ஞானப்பெண்ணே. 14

ஓஞ்சுனுவு ஒருமூன்றுரெண்டொன்று
லொன்னைத்தவிர கெதியில்லாத
சாரநீதன்தெரிந்தவர்க் கென்னுளுஞ்
சாயுச்சியந்தானடி ஞானப்பெண்ணே. 15

நானென்றுதூலத்தைச் சொன்னதுபோலந்த
நாபரூபமற்றபூரணத்தைத்
தானென்றுநித்தியம் பழகிநிறைந்த
தன்வடிவாகுமே ஞானப்பெண்ணே. 16

தன்வடிவாமந்த பூரணசாம்ப
சதாசிவன்றன்னை மறந்ததினுல்
உன்வடிவானது பிண்டமதாகவும்
முள்ளத்தில்கண்டது ஞானப்பெண்ணே. 17

கண்டபயக்கமே லோகமெல்லாமிந்தக்
கண்டமில்லாவிடந் தானகண்டம்
அதுஉனக்குப்படாவிடம் நீயாச்சு
தந்தவிடஞ்சோதி ஞானப்பெண்ணே. 18

ஆலம்விரையோ வெகுசிறுது அந்த
ஆலமரமோ வெகுபெரிது
மேலச்சிதம்பரம் பீசத்திருந்திந்த
மேதினிவந்தது ஞானப்பெண்ணே. 19

வந்தமரம்விரை தன்னைமறைத்திடும்
வாரெனபிர்ம சதாசிவத்தை
இந்தஉலகுயிர் கூடி மறைத்திட்டு
தென்றுஅரியாயோ ஞானப்பெண்ணே. 20

இப்படியாக அரிவதற்குஅந்த
ஈசன்கிருபை யதில்லாட்டால்
தர்ப்பரஆண்வம தாகியசெல்வந்
தக்குமோதக்காது ஞானப்பெண்ணே. 21

தக்கும்படியது யேதெனக்கேழுஞ்
சாந்தமதாகும் பெரியோர்கள்
மெய்க்கும்படிபணிந்தா லதுயாருக்கும்
விள்ளவருமடி ஞானப்பெண்ணே. 22

விள்ளவுங்கொள்ளவும் போகாதுசதுர்
வேதமுடிவெனுங் காரணமாம்
உள்ளத்துக்குள்ளமதா யிருக்குமந்த
உணர்வுதானடி ஞானப்பெண்ணே. 23

உள்ளத்தில்வந்தவன் றன்னையுமுன்னையு
மொன்றியிருந்து அரிந்தவன்பர்
கள்ளத்தைச்சொல்வதர்க் கீஸ்வரனுமில்லை
கன்னிமயக்கமே ஞானப்பெண்ணே. 24

கன்னியெனுமகமாயி மயக்கென்று
காசினியோர்மதி செய்யாமல்
பின்னமதாய்ப்பவ பாவனையாக
பேசியிரந்தனர் ஞானப்பெண்ணே. 25

பாவிக்கும்முன்னின்ற பாவனையேயந்த
பாவனையேயிந்த லோகமெல்லாம்
பாவிப்பதென்று அரிந்துகொண்டா
லொருபாவனையில்லையே ஞானப்பெண்ணே. 26

கண்ணால்பார்க்கவுங் கூடாது-காது
தன்னால்கேழ்க்கவுங் கூடாது
விண்ணோர்மாலயன் தானறியாரந்த
வெட்டவெளியடி ஞானப்பெண்ணே. 27

வெட்டவெளியே வெகுசூட்சம்அந்த
வெட்டவெளியிலும் நீசூட்சங்
குட்டையரிந்தவர் தங்கள்பெருமையைக்
கூரவும்நாவுண்டோ ஞானப்பெண்ணே. 28

ஆரென்றுஉன்னை யரியாமலிந்த
அம்புவிவாசனை தன்னாலே
பேரொன்றையிட்டு பிரபலஞ்செய்வதில்
பெருமையென்னடி ஞானப்பெண்ணே. 29

யெந்தமதிப்பதைப் பெற்றாலுமுன
தின்பமதிப்பதை பெரவேணும்
அந்தமதிப்பதைப்பெற்றை யென்றாலுன்னை
யாருந்துதிப்பரே ஞானப்பெண்ணே. 30

நாதலயமே வுலகலயமந்த
நாதமேலோக மேலாமதிப்பு
நாதம்வளர்ந்த விடமுலகத்தினி
நாதத்தப்புரம் ஞானப்பெண்ணே. 31

அப்புரப்பட்டு இருந்துகொண்டாலிந்த
அண்டபிண்டத்தொழி லாமுயிரை
சுப்பிரமாக வரிந்திடலாமப்போ
சொல்லவுமொப்புண்டோ ஞானப்பெண்ணே. 32

கண்டதுதூல உடலாச்சுஅதைக்
கண்டதுசூட்சுமக் கருத்தாச்சு
துண்டுபடாவிடங் காரணமீதனைச்
சோதிக்கவேயடி ஞானப்பெண்ணே. 40

காரணகாரியம் ரெண்டென்றுசொன்னதுங்
கர்ப்பனையேயது யேதெனக்கேள்
பூரணபாவமறியார்க்குச் சொன்ன
போதனையாமடி ஞானப்பெண்ணே. 41

காண்பவன்காண்பொருள் பாவனையாயெவன்
கண்டுள்ளந்தன்னிலே காண்பானோ
தாம்பிரம்போலே அழுக்குடைத்தகெஜ
சண்டி அஞ்ஞானியாம் ஞானப்பெண்ணே. 42

காண்பதன்காண்பொருள் பாவனையாயொரு
காரணந்தானது மில்லாமல்
சாம்பசிவவடிவாக யிருப்பவன்
தானேஞானியம்ஞானப்பெண்ணே. 43

எத்தனைகோடி சுருதிமுறைப்படித்
தென்னபலனதிலொன்றுமில்லை
அத்தனையுந்தன்னைக் காட்டுதற்காய்வந்த
ஆதரவாமடி ஞானப்பெண்ணே. 44

தேகம்பொறிமன தாவியுஞ்சாக்ஷியுஞ்
சேர்ந்தகாரணகார்யமென்று
ஏகமதாகப்பிரித்தறியாருக்கு
என்றுபிறப்பரும் ஞானப்பெண்ணே. 45

ஒப்புச்சரியென்று சொல்வதர்கவ்விடத்
துன்னைத்தவிரவே ராரிருக்கார்
செப்புமொழித்தடத் தேகடந்தாலதைச்
சேர்ந்துவாழலாம் ஞானப்பெண்ணே. 33

சேறடிமாவடிவானகுறவனைச்
சேறப்பவமது தீனமதாம்
ஆறடி அக்குறவனைச்சேர்வதும்
அம்மைவலுவடி ஞானப்பெண்ணே. 34

அம்மையுமப்பனுஞ் சேர்ந்ததினாலிந்த
அண்டசராசர முண்டாச்சு
அம்மையுமப்பனுஞ் சேர்ந்ததெவ்வாறென
ஆயிம்மயக்கமே ஞானப்பெண்ணே. 35

சொல்லுக்குமுன்னின்ற ஜோதிமயந்தன்னை
சோதித்துநித்யமாய் பாராமல்
வெல்லப்படாச்சொல்லி யெம்புட்டுக்கொள்வதில்
வேடிக்கைதோணுமோ ஞானப்பெண்ணே. 36

வேடிக்கைதோணவென் றுனுரைப்பேனிந்த
மேதினியாம்பஞ்ச பூதங்களை
வாடிக்கையாயது வந்தவிடங்கண்டு
மனம்நிறுத்தடி ஞானப்பெண்ணே. 37

வந்தயிடந்தன்னைக் காணுமல்சும்மா
மனம்நிருத்தமுடியாது
அந்தஇடந்தன்னைச் சோதிக்கரின்மனம்
ஆனந்தங்கொள்ளுமே ஞானப்பெண்ணே 38

கண்டதுங்கேட்டது உன்னையல்லால்ரெண்டு
காணஇருக்குதோ கண்டுவுரை
விண்டவர்கண்டதுங் கண்டவர்விண்டதும்
வீணுரைதானடி ஞானப்பெண்ணே. 39

வந்துபிறந்தது மூன்றதுயேதுகேள்
வாயுவும்மக்கினி அப்பதுவுந்
தந்திரமாயிங்கு வாழ்ந்துஅப்பால்நின்ற
தானமொடுங்குது ஞானப்பெண்ணே. 46

வந்ததும்போனதும் நீயரிவாயந்த
வந்ததுஉன்னையறியாது
யெந்தவகையதும் நீயறிந்துமன
தேங்குவதேதடி ஞானப்பெண்ணே 47

அன்னமயமுதலைந்து கோசந்தனக்
கப்புரம்நின்ற பொருளதனை
நிர்ணயமாகிய பக்திவைத்துத்தொழ
நீனுமில்லையே ஞானப்பெண்ணே. 48

நானருள்நீபொருளாப் பகலாய்த்தோணும்
யாதுபார்க்கவிளங்குதுபார்
பானுமதிதனை நாளுக்குநாளுண்ணும்
பழக்கமேதடி ஞானப்பெண்ணே. 49

சங்கற்பமானது அஞ்சடியோ அந்தச்
சங்கற்பமேபிரபஞ்சமடி
உன்கர்ப்பனையென்று அஞ்சுக்கண்டாலிந்த
உலகமேதடி ஞானப்பெண்ணே. 50

ஒன்றுக்கொன்று விஷயபடி பார்பின்பு
ஒன்றுக்குமுன்னைத் தெரியாது
யென்றைக்கும்பொருளொன்றுக்கும்விஷய
மென்பதர்கில்லையே ஞானப்பெண்ணே. 51

சச்சிதானந்தஞானக்கும்மி முற்றிற்று.

---

## ஞானத்தங்கப்பாட்டு.

பூலோகத்தில் மதுரைஹாலாஸ்ய க்ஷேத்திரமென்று சாலோகமுதலான-நாலுபதமுந்தருந்-தடையில்லை யேயாமடி-தங்கம்-சகலகலைக்குஞ் சம்மதமாம். 1

ஆறுபத்துநாலுவிளை-யாட்டமிடுஞ் சொக்கநாதர் பேருபெற்ற மீனவள்தன்-பேரின்ப பாதமதில்-பிரேமையாய் பக்திவைத்தாலடி-தங்கம்-பிறப்பற்றுபோகுமடி. 2

ஜென்மமெடுத் தென்னபலன் - நன்மை செய்யவேணுமப்போ-சின்மயவிலாசச்சொக்கர் - தேவிமீனம்பிகையால் - திருவருளுண்டாகும் பாரடி-தங்கம்சிரஞ்சீவியாய் நிற்கலாம். 3

பக்திசெய்த பேர்களுக்கு - முக்திசித்தமாய்க்கொடுக்கும், அத்தன்சொக்க நாதசிவன் அங்கயர்க்கண்ணாள்மகிமை-ஆராலுஞ்சொல்ல வொண்ணாதடி-தங்கம் ஆச்சரியம்மெத்தவடி. 4

நித்தியகர்மானுஷ்டானங்கள் - நேமமதுவாகச் செய்து நித்தியஉஷக்காலம்வந்து-நேசமாய்ச் சொக்கருமையின்-நிசவடி தொழுதை யென்றாலடி-தங்கம் நினைத்தகாரியஞ் சித்தியடி-5

மூலலிங்கேசரையும் - வாலைமீனம்பிகையுங்-காலைசந்தியில் வந்து-நூலின்படி தப்பாமல் காசலையாய்தரிசித்தாலடி-தங்கம்-கைவல்ய பதங்கிடைக்கும். 6

ஒருகுரியாகநின்று-மறவாமலன்புவைத்து-திரிகரணசுத்தியாய்-திரிகால சந்திநேரந்-தேவிமீனாட்சி சொக்கரையடி-தங்கம்-சேவிஜென்மசாபல்யமாம். 7

அச்சமற்றிரங்கும்போத-சச்சிதானந்தஸ்வரூப நிச்சயந்தானைச்செய்யும்-உச்சிக்காலந் தேவிசொக்கர்நிஜரூப தரிசனஞ் செய்யடி - தங்கம் - நித்தியா னந்தம் பெருவாய். 8

மாயக்குணங்களெல்லாம் - மாயும்படிக்கில்லுபாயஞ்சொ க்கருமையை - சாயரட்சையில்வந்து - பிரதிதினம்தரிசித்தா லடி - தங்கம் பாக்குஞ்சந்தேகமில்லை. 9

சோமசுந்தரேச சிவ - காமிமீனவர்தனர்த்த - ஜாமமதிற் றினம்வந்து - நேமமாகத் தரிசித்தால் - சர்வபாப நிவர்த்தியா மடி - தங்கம் - தன்வடிவுந் தோணுமடி. 10

கள்ளமதுவுந் தோணுமல் - லுள்ளபடியா யிலங்கும்பள் ளியறையில்மீனாட்சி - வள்ளல் சொக்கநாதரையும் பக்தியாய் தரிசித்தாலடி - தங்கம்பசுபதிநீயாகுவாய். 11

ஒருவிகற்பமில்லாத - பெருவெளிபோ லிலங்கும் - திரு வனக்தல்வேளையில் - பரமசொக்கருமையை - தருசித்தபேர் க்கு அடி - தங்கம் - ஜெனமம்பாவணமாகும்மடி. 12

இப்படிச்சொக்கருமையை - தப்பாமலெட்டுக் காலமும் - அற்புததீபாராதனை - யாம்பொழுது தரிசித்தால் அஞ்ஞான மேதவர்க் குண்டோவடி - தங்கம் - அகங்கொளிந்தானந்த மாம். 13

ஷட்காலம்பள்ளியறை-தப்பார்திருவனந்தல் சொக்கலிங் கருமையை - முக்கியமாய்த் தரிசித்தால் - சோகமோகமணு காது பாரடி - தங்கம் - சொரூபசித்தி யாகுமடி. 14

ஆறுகாலபூசைகளும் - ஆனபின்பல்லாக்குச்சொக்கர் பாரி மீனலோசனைபால் - பரமசுகம்பெருக - பள்ளியறைக்கு வருவா ரடி - தங்கம் - பார்க்கக்கண் கோடிவேணும். 15

பிர்மஹத்திமுதலான - கர்மவினைகள் முழுதும் - உண் மைவடிவானசொக்கர் - உமையடிதரிசித்தால் ஓடுங்கண்காணு மலேயடி - தங்கம் - உள்ளன்பு வேணுமடி. 16

ஆருறுதத்வங் களும் - ஆறுபத்துதாப்தீகமுஞ் - சீறுவை
ந்துந்தள்ளி - சேடமாய்நின்ற பொருள்தான் - ஸ்ரீ மீனலோ
சனி சொக்காடி - தங்கம் - தேரி ஜென்மபாவனமாம். 17

வாசவன்பூசைசெய்யும் - மதுரைமீனாட்சி சுந்தரேசர்திரு
வடியை - யெப்போதுந்துதிசெய்தால் இன்பமனைபெரலாமடி -
தங்கம் - இனியுனக்காரிங்கிப்பால். 18

ஆரென்றுணையரிந்து - அநுபவியாமல் சும்மா - நேரங்
கடத்துவது - நீதியல்லவேயுந்தன் - நெஞ்சில் விசாரங்கொள்
வாயடி - தங்கம் - நித்திய பதங்கிடைக்கும். 19

தேகமனித்தியமென்று - தெரிந்துஞ்சொக்கரு மைமேல்
மோகம்வராமற் சும்மா - மூடமாயிருப்பதில் முக்திபதங்கிடை
க்குமாவடி - தங்கம் - மூடம் நீங்கினல் கிடைக்கும். 20

மூடம்நீங்குமா சும்மா - மோட்சதியான மெப்போதும்
நாடநீங்குமப்போது - நானென்றகமகன்று ஞானரச முன்ன
லாமடி தங்கம் நாசமொருக்காலுமில்லை. 21

நாசசரீரத்தினி - லாசைவைத்தாப்போல சுந்தரேசன்திரு
வடியில் - நேசமுண்மையாய் வைத்தாலிருக்கும் பொருள்வெளி
யாமடி - தங்கம் - இனிஜென்மப்பயமேயில்லை. 22

லோகமெங்கும் வியாபகமாய் - யேகவஸ்துவா யிலங்
குந் - தோகைமயில் வாகனனை - மோக்முடன் பெற்றெ
டுத்த-சோமசுந்த ரேசனடி-தங்கம்-தொண்டர்கட்குநேசனடி.

காட்சிவடிவாய்ச் சொக்கர் - மீனாட்சிபாதம்நம்பு மல்லி கார்ச்சுனன் தமிழ்கு-னறர்ஜிதமா யிலங்கும் - கைவல்லியமாம் பொருள்தனையடி தங் கண்டவர்கிமே ஆனந்தமாம். 24

ஞானதங்கப்பாட்டு முற்றிற்று.

---

## மீனாட்சியம்மன்பேரில் சீசபத்தியம்.

சிங்காரமோகினி-ஜெயசிங்கவாகினி-ஸ்ரீ தரன்சோதரி-திவ் யரூபி - தென்கூடல்ராணியே - மங்களவாணியே - ஸ்ரீ மீன லோசனி-சற்குணங்கி-சங்கீதவாரியே-இங்கித நாரியே-சமரசா னந்தமே-சக்கியநிதியே-மங்காதசெல்வியே-துங்கமாங்கல்வியே-மலயத்துவஜபாண்டியன்-மகிழும்மகவே-சங்கரிகௌரி மாதங்கி சர்வசாக்ஷி-சாம்பசிவ சுந்தரேசனுந்தயவு செய்வாய்-அங்கசங்க மேசெய்யனுன் ஆசையானேன் அதையறிந்து நீ இப்பதென்ன ருகில்வருவாய். 1

யென்ன நான் சொன்னதுன் - கர்ணமுள் கொண்டதோ-யில்லையோ சொல்லுவாய்-இன்பமாதே-முன்னே நான்-பின்னேநீ அன்னமே உள்ளதாய்-முக்கியமாய் பேசினேன் சக்கியநிதியே-பின்னமென்னுராய் - தென்னவன் புத்திரியே - பேதமேயா காது, போதமணியே-உன்னையாரென்றபார்-யென்னைநீ காணு வாய்-உடல்ரெண்டு உயிரொன்று - உருதிசொன்னேன்யின்ன மென்னதாஞ் சொல்லலாம்மேகரூபி-யிஷ்டமொன்று தானெ ன்றமிலங்கவேணும்பண்ணகாபரணயீசனும் பாரு பாரு, பங்க சாக்ஷி நீ யிப்பவென்பாலில் வருவாய். 2

அந்தரி சுந்தரி-அகிலாண்டநாயகி - அமரேந்திரசேவிதே-அமிர்தவடிவே - சிந்தையேனென்னுராய் - சந்ததம்முள்ளதில்-சினேகமே நல்லதாம் - மோகமணியே-சொந்தமாம்-பந்துபார்-அந்தமாம்புந்தியில் சோதனை செய்கிரீர்-தோணிமுடிவில்-வொரந்தனூர்யெந்தவூர் யெந்தவூரல்லாவாம்-யென்னபாரப்யமேசொர்ன்மயிலே - சுந்தரேசானுஞ்சந்தேகந் துணியவேண்டாம் சுந்தமாய் நின்றுவாழலாம் யுக்தமிதுதான் புந்திபண்ணுவாய் மோகம் பொருந்தலாகாப் பூரணனந்தயோக புண்ணியமாதே. 3

சுந்தரவாணியோ - சொகுசானபூவையோ துய்யமாங்கிள்ளையோ தோகைமயிலோ - இந்திராணியோ இந்திராதிதேவர்தொழும் ஈஸ்வரன்னுண்டுசெய் - இன்பவடிவோ, சந்திரரேகையோ - சரசபொற்பாவையோ சதுர்முகன்னின்பமாய் - சமைத்தமின்னே, முந்தித்தவமகிமையால்-வந்தமோகரதியோ-யெழுமைமுக்கியமாய் நாஞ்சொல்ல முடியுமோசொல் மோடிசெய்யாமல்வாடி ஜெகன்மோகநாங்கி. 4

அன்னமோ சொர்ணமோ - அழகான பூவையோ ஆனந்தவல்லியோ - அமிர்தவடிவோ - மின்னினிடை மாதுமுகஞ் சந்திரபிம்பங்களோ - வேதனர் வேணுமென்றமைத்தமின்னே - கன்னரசமொழிகளோகனிவாய் நற்பவளமோ-யென்கருத்துக்கிசைந்திடுங் கட்டாணிமுத்தோ-பின்னல் கருங்கூந்தலில்-நினைத்தமல்லிகைமலர் - பிரியமுடன் தரித்திடும் - விஷேஷங்காணே யின்னமென்னதான் சொல்லினும்இவள்கு ஈடுமுன்னுந்தனைச் சேர்ந்து மருவி நீ கூடு - கூடு - பின்னு மீசனைப்பூசித்தபலன்கள் தானே-மோடிசெய்யாமல்வாடிஜெகன்மோகனாங்கி. 4

## ஸ்ரீ முருகன்பேரில் ஸீஸபத்தியம்.

அரகரமுருகனே - அரிதிருமகனே - அமரேந்திர பூஜிதா- அமுர்தவாக்கியா - பரசுந்தரகுகா - சரவணோர்பவசுகா பார்வதி நந்தனு-பரமபுருஷா. சரசவினோதாங்க—வரகருணுகரா - சர்வக் ஞமாம் போதத்துவமூர்த்தி இறையுபதேசனே — பரங்கிரிவா சனே. யேழை பங்காளனே-இன்பலோலா-குருமுனிவனுர்க்கரு ளுந்-குமரனுதா-கோசபூதாதிகாரணுகுண விசாலா-சர்வசித்திப் பிரதாயகா - சர்வசாம்பிரதாயா சச்சிதானந்த பூரண - சாமி வடிவேலா. 6

மீனுட்சியம்மன்பேரில்.

சீசபத்தியம்.

முற்றிற்று.

சோபானேராகம் சுத்தசாவேரி.

பல்லவி.

சொக்கலிங்கமே யெனக்கன்பாரும்
உயிற்றுணையுனையல்லாது வேரிங்காரும்

அனுபல்லவி.

சக்கரபாணிக்கிளைய முக்கனிமருவுஞ்சிவ
சாம்பா-யென்மேல் வீம்பாய்-மனம்
வேம்பானதேன் பாம்பாபரணா (சொக்)

சரணங்கள்

காமியத்திலேவிழுந்து நான்முழுகினாலும்
வொருக்ஷேமமின்றியே இப்படிக்கா
முடலெடுத்து இன்னல்பூமியி
லொன்றுந்தெரியாப் பாமரன்தானின்றது
போதும்இனியாது நல்ல
தோதுங்கெதியேதுங் காணேன் (சொக்)

நல்லகிர்த்தியஞ்செய்யரியேன் புல்லறிவ
தேமிகுந்து அல்லல்மனதாகுமிதை
வெல்லவலு வில்லையைய்யா
தொல்லையற்று நின்பதத்தை
அல்லும்பகலுந்துதிக்க தோணும்வழிகாணும்
படிவேணும் அப்பவேணும்
கொஞ்சம் (சொக்)

சிந்தைதெளிவான கிருஷ்ணனந்த
சரஸ்வதிதன்னை சொர்தமாம்மடுமைகொண்ட

சந்திரசேகரா பரமா
மந்திரனே மல்லிகார்சுனன்
தமிழ்க்கருள் நமசிவாயா
சர்வக்ஞேயா ஆலவாயா
அப்பிரமேயா மதுரை (சொக்க)

சோபனே-ராகம் தன்னியாசி

பல்லவி.

மதுரைமீனும்பிகை தெரிசனஞ்செய்தால்
வருமேகனபாக்கியம்.

அனுபல்லவி.

கதிபெருமாதவர் துதிசெய்து தொழுஞ்செக
காரணியெனும்பரிபூரணியாகிய மதுரை

சரணங்கள்.

ஓடித்திரியுமதில் லென்னசிலாக்கியம்
உண்மையாய்க் கேழுநான்
சொல்லியவாக்கியந் தேடித்தினம்நல்லோர்கள்
வாசஞ்செய் யோக்கியம்.
சிந்தையிலாத்மவிவேக மாரோக்கியம்(மதுரை)

யென்னமில்லாமல் விணுவிணில்நித்தியம்
யேதுக்குமானிடர் மேலிந்தசுத்தியம்
பண்ணுவதானுனக் கென்னசம்பாத்தியம்
பக்தியதாய்மறவாமல் லகத்தியம் (மதுரை)

நினமல்லிகார்ச்சுனன் சொல்லையுட்கொண்டு
சிவனையாரென்று சிந்தையுட்கண்டு

மனம்மூளவாகவே தியானித்துநின்று
வாக்குகெட்டாமதி யமுர்தமதுண்டு (மதுரை)

## ஸ்ரீ சுப்பிரமண்யர் பேரில்

சோபானேராகம் அடாணு.

பல்லவி.

அய்யாயருள்செய்யலாகாதாயெனக்காருதுணே
வந்து காரு-தருணமென்னய்யா.

அனுபல்லவி.

வைய்யாமது-மெய்யாய்விளங்கிய-மாயன்மருகா
தண்டாயுத-வேல்முருகையா.

சரணங்கள்.

உன்னைத்துதித்தென்றும் நிர்ணயமாய்
பூகித்துன்பதம்போற்றல்லையா அந்த
உண்மையதிங்குந்தன்மனத் தொன்றேனும்
உள்ளதாய்-தோற்றலையா மேலுஞ்
சொன்னதமிழுந்தன் கர்ணமது
கேழ்க்கதூரமா அல்ல
தென்னேரமதாய்ச்சொல்லு சின்னமதியன்பால்
பின்னம்நினேப்பது சீரல்லக்கண்பாரு
மின்னேரங்கருணே வைத்தய்யா
ஆதிமுதலுந்தன் பாதத்துக்கே
தொண்டனது மென்னபொய்யா
பொறி-ஐம்புலனுமிந்த அர்புவிவாழ்வ
திங்கனுலுமென்ன மொய்யா

வாரம்மாதந்தினம் வருடாதியாக்காலங்கள்
வம்பாகச்செல்லுது தெம்பாளனக்கொரு
போதனைசெய்தனு பூதிபெறவெந்தன்
பொல்லாக்கருமங்க ளெல்லாமகன்றிட(அய்)

வெகுசுகிர்தவிஷமதாம் பக்தர்
மெய்யர்தமைகாக்கும் சுப
வீக்ஷணனே மல்லிகார்ச்சுனபாரதி
விள்ளுந்தமிழோர்க்குஞ் சர்வ
ஜெகன்மோகனு உன்மகிமை
மூவரால் செப்பஉண்டா
சிவசுப்பிரமணியா வியாசா
சுகமுனியாதிகள் மாமுனியோகிகள்
சூழும்பழனியில்வாழும் மயில்வாகன்(அய்)

சோபானே-ராகம்-முகாரி

பல்லவி.

இதுவே-வேளை - மதிசெய்தருளும் - நாளைஇருப்பதென்
னவோ நம்பலாம்

அநுபல்லவி.

கதிதருஞ்சிவகிரிக் கதிபதியெனவளர்
கந்தாநினைத்தவரந் தந்தாதரவுசெய்யா(இது)

சரணங்கள்.

ஆசையோகனக்கின்றி பாசம்போல்மூடுது
அசனசயனுதியின் ருசிமிகவுந்தேடுது

வாசனவிஷயப்பிர வேசனையோடிது
மனதும்மதனல்னொந்து தினமுமிகவாடுது (இது)

சொல்லர்தவலைகளில் செல்லாம
லுன்கண்பாரும் புத்தியுனைத்துதிக்கும்
பத்திசிரத்தைதயைத் தாரும்
வெல்லாப்புகழும் பேரும்
நல்லோருறவைச்சேரு யேழையுனை
நம்பினேன் றுளுமெந்தனைக்
காரும் (இது)

சங்கையுற்றோரைக் காக்கும்
மங்களவடிவேலா தாசன்
மல்லிகார்ச்சுனன் நேசன்சொல்கனுகூலா
திங்களணியுஞ்சிவ சங்கரியருள்பாலா
தேவரிடுக்கந்தீர்க்கும்மாவல்லப விசாலா (இது)

சோபானே-ராகம்-காம்போதி.

பல்லவி.

அந்தாங்கமாயுள்ள சொந்தநாயகருடன்
அனுபவிப்பாய் நெஞ்சமே

அநுபல்லவி.

சந்ததமாமாயிந்த மைந்தர் தாராதியுடன்
சக்கியமாய் நிற்பதெல்லாங்
கக்கிஷந்தானே யோசி
சகலகலாமறையின் ரகசியந்தினிலிலங்குஞ்
சுகநிதியதனைத்தன் னகமென்றறிந்துணர்ந்து
சாதனமுடிந்தபூர்ண போதவடிவானசொக்க

நாதசிவசாம்ப — னெனும்
நீதனையெப்போது — மன்மாய்

அந்தரங்க.

பூதவடிவுஇது — வேதவடிவுஇது
பொரிபுலன்உடலிது — கரசரணாதிஇது
நாதவிந்தாதிஇது — ஆதவன்மதிஇது
நக்ஷத்திரம்-மாசம் — வாரம்
பக்ஷந்திதிகளிது — ராவிது-பகலிது
வாழ்விது-சாவிது — நானிது
யெனதிதுதானே — இதனையெல்லாங்
கியானமூலமாயரியுங் — கோனெவன்
அவனைச்சதாய் — நாட்டம்
வையுன் — வாட்டம்போம்
அபீஸ்டமாம் — கொண்டாட்டமுண்டாம் (அங்)

முன்னோர்கள்செய்த — தவந்தன்னால்
சித்திக்கும்வெகு — முக்கியமாம்பிர்மகுலம்
புக்கிவந்தால் — நலந்தான்
சொன்னால் — வாரதுநிஜம்
இன்னல் இல்லாத — மெய்யாஞ்
சுகித்ததில்யென்னமிச்சம் — ஜெகத்தில்த்
தனித்துப்பாரு — சொக்கருணையல்லது
நிற்கும் — பொருளேதுண்டாம்
உள்கனிவாய்பதி — பக்குவம்வந்துஇங்கு
சூழ்ச்சி — மல்லீகார்ச்சுனய்யன்
வாச்சியப்படிக்கே — நின்று
சுப்பராய — தேசிகனை
யெப்பொழுதும் — வேண்டியண்பாய் (அந்த)

கீர்த்தனை முற்றிற்று.

## மங்களம்.

இராகம் அசாவேரி.

பல்லவி.

சோமசுந்தரரேசனுக்கு ஜெயமங்களஞ்சிவ
சொக்கலிங்கேசனுக்கு சுபமங்களம்.

அனுபல்லவி.

ஸ்ரீ மதுரவாசனுக்குஞ் சிற்பரவிலாசனுக்கும்
மாமதிவுல்லாசனுக்கும் வல்லசித்தவேஷனுக்கும். (சோம)

சித்தர்முனிவர்தொழுமூலனுக்கு மங்களஞ்
சிற்குணாநந்தகுணவிசாலனுக்கு மங்களம்
பக்தமுக்தஜெனபரிபாலனுக்கு மங்களம்
பார்வதிரமணதிவ்யசீலனுக்கு மங்களம். (சோம)

மீனலோசனும்பிரகாசமேதனுக்கு மங்களம்
வெட்டவெளிமேனியாம்விபோதனுக்குமங்களம்
தீனதயாபரமோனுதிதனுக்கு மங்களந்
திங்களணியும்ஹாலாஸ்யநாதனுக்கு மங்களம். (சோம)

மல்லிகார்ச்சுனன்சொல்நிர்விகாரனுக்கு மங்களம்
மன்மததகனமாரதீரனுக்கு மங்களம்
சொல்லுமறைதனிலுள்ளசாரனுக்கு மங்களம்
துங்ககதம்பவனுதாரனுக்கு மங்களம். (சோமசுந்த)

மங்களம் முற்றுபெற்றது.

---

சிவமயம்.

# சேது மகுத்துவம்

## புதியபதிப்பு புஸ்தக விளம்பரம்.

ஐயா, இதனடியில்கண்ட விலாசத்தில். தமிழ் தெலுங்கு. கிரந்தம், துலுக்கு சிறுவர்களுக்குவேண்டும் ஸ்கூல்புஸ்தகங்கள் தற்கால நவீனநாவல்கள் முதலான எல்லாவிதபுஸ்தகங்களும் எக்சாசயிஸ் நோட்டுமுதல் பேறேடு குறிப்புவரையுள்ள நோட்டுபுஸ்தகங்களும் தற்காலவிலைக்கு கிடைக்கும் வீபியில். ஆடர் செய்தாலும் அனுப்பப்படும் ஆடர்கள் அப்போதுக்கப்போது கவனித்து அனுப்பிவைக்கப்படும்.

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீராமேச்சுரமென்னும்சேது ஸ்தலபுராணவசனம் | 2 | 0 | 0 |
| ஷெசுருக்கம் சேதுமகுத்துவம் | 0 | 6 | 0 |
| சேதுமகுத்துவக்கும்மி | 0 | 1 | 0 |
| சேதுமகாசங்கற்பம் கிரந்தம்தமிழ்சேர்ந்தது | 0 | 2 | 0 |
| சேதுமகாத்மியம் கிரந்தம் | 1 | 8 | 0 |
| சேதுராமேஸ்வர மஹாத்மியம் தெலுங்கு | 0 | 12 | 0 |
| தெலுங்கு மகாசங்கற்பம் | 0 | 2 | 0 |
| ரரமநாதசுவாமிபதிகம் | 0 | 1 | 0 |
| ஸ்ரீபர்வதவர்தனியம்மன் பிள்ளைத்தமிழ் | 0 | 5 | 0 |
| சோதிடவானசேகரசப்தகோளதீபம் சக்கரத்துடன் | 1 | 0 | 0 |
| சோடபாராசாரியம் | 0 | 6 | 0 |
| சோதிபேரகாரதிரயப்பதிப்பு | 2 | 0 | 0 |
| சிற்பநூல்பொக்கிஷம் | 1 | 0 | 0 |
| ஆர்மோன்ய அனுபவசங்கீதம் | 1 | 4 | 0 |
| ஸ்ரீமீனாக்ஷியம்மன்கோலாட்டபாட்டு | 0 | 1 | 0 |
| சிவக்ஷேத்திரயாத்திராவிளக்கம் | 0 | 8 | 0 |
| ராமேஸ்வரக்ஷேத்திரபடம் | 0 | 2 | 0 |

**என். செல்லய்யாப்பிள்ளை.**

புஸ்தகஷாப் புதுமண்டபம்,

மதுரை.

# ரிஜிஸ்டர் அறிவிப்பு.

---

இதனால் சகலமானவருக்கும் அச்சுக்கூடத் ததிபர்களுக்கும் அறிவிப்பது யாதெனில் மீனாக்ஷி சுந்தரேஸ்வரர் உர்ச்சவப் பிரகடிகை என்னும் நூதன கல்யாணபாட்டை எனது தகப்பனார் லேட் நாகலிங்கப்பிள்ளை யவர்கள் சகல சுதந்தரத்துடன் அச்சிட்டுவந்த ஷை புஸ்தகத்தை என்னால் தர்காலம் சில சீர் திருத்தத்துடன். அச்சிட்டு ரிஜிஸ்டர் செய்திருப்பதால் ஷை புத்தகத்தை என் அனுமதியன்றி யாதாமொருவர் அச்சிடுவரேல்1867 வருஷத்து 25-வது ஆக்ட்டு 20-வது. பிரிவு 6 - வது உட்பிரிவின் விதிப்படி யான்கோரும் நஷ்டத்திற்கும் பினல் கோட்செக்ஷன் குற்றத்திற்கும் உத்தரவாதிகளாக வேண்டுமென்பதை கவனிக்கக் கோறுகின்றேன்.

இந்தப்படிக்கு,

**என். செல்லய்யாப்பிள்ளை**

புஸ்தகஷாப் புதுமண்டபம்,

மதுரை.

உ

# சேதுபர்வதவர்த்தனியம்மன் பிள்ளைத்தமிழ்.

இதனால் சகலமான ஆஸ்திக கனதனவான்களுக்கும் அறிவிப்பது யாதெனில் ஆஸேது இமாசலம் என்று பெரியோர்களால் வர்ணிக்கப்பெற்ற ஸேதுவில் விளங்கும் கந்தமாதன கிரிச்சாரிபில் ஓங்கும் திருவிராமீச்சுரத்தில் திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் ராமநாதர்பாகந்தமர்ந்த மலைவளர்காதலி யென்னும் பர்வதவர்த்தனியாம் அருட்சத்தியின் பேரில் பிள்ளைத்தமிழ் கவி செய்யுமாறு தனவைசிய சிகாமணியார் விருப்பின்படி மதுரையில் வாழும் கவிராயர் சிரேஸ்டர்களில் முதன்மையுற்ற மு. ரா. அருணாஜலக்கவிராயர் அவர்களால் பிள்ளைத்தமிழ் இலக்ணம் குறைவராது இயற்றியதும் நகரவைசிய தனவான்களில் நன்மதிப்பைபெற்று அரங்கேற்றப் பெற்றதுமான ஷெ பிள்ளைத்தமிழை அன்புடன் ஓதுவார்க்கு உறும்பிள்ளை கலிதீர்த்து புத்திரசந்தானத்தை அருள்வதாய் இருப்பதால் அதை அனைவரும் வாங்கி அன்புடன் ஓதி அம்பிகையின் அருளைப்பெறவேணும் என்ற முக்கிய நன்நோக்கத்துடன் பொருட்செலவு கருதாமல் சுத்தப்பிரதியாக அச்சிட்டு சுவல்ப கிரையத்திற்குவிற்க முன்வந்திருப்பதால் யாத்திரை ஸ்தலமாகிய ராமேஸ்வறத்திர்க்குறிய சகலமான புஸ்தகங்களும் குறைந்த விலைக்கு விற்றுவருவதால் எல்லாரும் நன்கு கவனித்துவாங்கி அதன்பயனை அடையும்படிக்கு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

புத்தகம் 1-க்கு அணா விலை 0 5 0

என். செல்லய்யாபிள்ளை,

புக்ஷாப் ராமேஸ்வரம்.

---

☞ இன்னும் இதர எல்லாவிதமான புஸ்தகங்களும் எமது புக்ஷாப்பில் நேரிலும் வீ. பீ போஸ்டு மூலமாயும் பெற்றுக் கொள்ளலாம்.

உ

சிவமயம்.

# சேது மகுத்துவம்.

## புதியபதிப்பு புஸ்தக விளம்பரம்.

ஐயா, இதனடியில்கண்ட விலாசத்தில். தமிழ் தெலுங்கு கிரந்தம், துலுக்கு சிறுவர்களுக்குவேண்டும் ஸ்கூல்புஸ்தகங்கள் தற்கால நவீனநாவல்கள் முதலான எல்லாவிதபுஸ்தகங்களும் எக்சர்சயிஸ் நோட்டுமுதல் பேறேடு குறிப்புவகையுள்ள நோட்டுபுஸ்தகங்களும் தற்காலவிலைக்கு கிடைக்கும் வீதியில். ஆடர் செய்தாலும் அனுப்பப்படும் ஆடர்கள் அப்போதுக் கப்போது கவனித்து அனுப்பிவைக்கப்படும்.

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீ ராமேச்சுரமென்னும்சேது ஸ்தலபுராணவசனம் | 2 | 0 | 0 |
| ஷை சுருக்கும் சேதுமகுத்துவம் | 0 | 6 | 0 |
| சேதுமகுத்துவக்கும்மி | 0 | 1 | 0 |
| சேதுமகாசங்கற்பம் கிரந்தம்தமிழ்சேர்ந்தது | 0 | 2 | 0 |
| சேதுமகாத்மியம் கிரந்தம் | 1 | 8 | 0 |
| சேதுராமேஸ்வர மஹாத்மியம் தெலுங்கு | 0 | 12 | 0 |
| தெலுங்கு மகாசங்கற்பம் | 0 | 2 | 0 |
| ராமநாதசுவாமிபதிகம் | 0 | 1 | 0 |
| ஸ்ரீபர்வதவர்தனியம்மன் பிள்ளைத்தமிழ் | 0 | 5 | 0 |
| சோதிடவானகேகரசப்தகோளதீபம் சக்கரத்துடன் | 1 | 0 | 0 |
| சோடபாராசாரியம் | 0 | 6 | 0 |
| சோதிபேரகாரதிகயம்பதிப்பு | 2 | 0 | 0 |
| சிற்பநூல்பொக்கிஷம் | 1 | 0 | 0 |
| ஆர்மோன்யஅனுபவசங்கீதம் | 1 | 4 | 0 |
| ஸ்ரீமீனாக்ஷியம்மன்கோலாட்டபாட்டு | 0 | 1 | 0 |
| சிவக்ஷேத்திரயாத்திராவிளக்கம் | 0 | 8 | 0 |
| ராமேஸ்வரக்ஷேத்திரபடம் | 0 | 2 | 0 |

என். செல்லய்யா பிள்ளை,

புஸ்தகஷாப், புதுமண்டபம்

மதுரை.